# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

அசல் மனு எண்: 0108/2016/ந

ஆணை எண்: 169/2016

நாள்: 18.11.2016

திரு. ஆர். பாலசுப்பிரமணியன்,
555, பெருமாள்பட்டி கிராமம்,
சோழபுரம் அஞ்சல், சிவகங்கை மாவட்டம். – மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை

மனுதாரரது 15.02.2016 நாளிட்ட முறையீடு 18.02.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்: 0108/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் சிவகங்கை நகராட்சியில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு முறையாக வரிவிதிப்பு செய்யப்படவில்லையென்றும், புதிய வீடுகளுக்கு லஞ்சம் பெற்றுக் கொண்டு குறைவாக வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் புகார் செய்துள்ளார்.

மனுதாரருக்கு 10.05.2016 அன்று விசாரணை நிர்ணயிக்கப்பட்டு ஆஜராகுமாறு தெரிவித்து அழைப்பாணை (அ.ம.எண். 0108/16/ந நாள்: 01.04.2016) இம்முறை மன்ற நடுவத்தால் அனுப்பப்பட்டது. மேலும், மனுதாரரது புகார்கள் தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்திடுமாறு சிவகங்கை நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை எண்:0108/16/ நாள்:01.03.2016ன் மூலம் ஆணையிடப்பட்டு, நகராட்சி ஆணையரது அறிக்கையும் (ந.க.எண்.660/2016/அ1, நாள்: 10.03.2016) பெறப்பட்டது.

மேற்படி அறிக்கையில் சிவகங்கை நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் ஏப்ரல் 2015 முதல் மார்ச் 2016 வரை வீடுகள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு (378 எண்ணம்) வரிவிதிப்பு செய்யப்பட்டு வரித்தொகை ரூ.3,76,499/- வசூலிக்கப்பட்டுள்ளதெனவும் விடுபட்ட கட்டிடங்களுக்கு உரிமையாளர்களிடம் உரிய ஆவணங்களைப் பெற்று வரிவிதிப்பு செய்யப்பட்டு வருவதாகவும், மேலும் அரசு கட்டிடங்கள் பட்டியல் பெற்று வரி விதிப்பு செய்யப்படுமெனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் 10.05.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணைக்கு வரத் தவறியபோதும் அவருக்கு கூடுதல் வாய்ப்பளித்து 13.07.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகிடத் தெரிவித்து 17.05.2016 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. மனுதாரர் தனது 31.05.2016 நாளிட்ட கடிதத்தில் மேற்படி அழைப்பாணை வரப்பெற்றது குறித்தும் தனது வர இயலாத சூழ்நிலைகள் குறித்தும் தெரிவித்துள்ளார்.

2015- ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளின், விதி 6ன்படி மனுவுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ரூ.10/- (ரூபாய் பத்து மட்டும்) மதிப்பிலான நீதிமன்ற கட்டண வில்லை மற்றும் ஆதார ஆவண நகல்களையும் ஒருவார காலத்திற்குள் தாக்கல் செய்யவும் மனுதாரருக்கு அ.ம.எண்: 0108/16/ந நாள்:28.06.2016ன் மூலம் மீண்டுமொரு அறிவிப்பாணை அனுப்பப்பட்டது. அவ்வாறிருப்பினும் மனுதாரர் போதிய வாய்ப்புகளுக்குப் பின்னரும் நீதி மன்ற வில்லைக் கட்டணம் சமர்ப்பிக்காததுடன் முறையீடு குறித்த ஆதார ஆவணங்கள் தாக்கல் செய்யவும் தவறியுள்ளார். எனவே, அவரது முறையீடு ஏற்கத்தக்கதல்ல என தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், இம்முறை மன்ற நடுவ அ.ம.எண்:0108/16/ந நாள்: 17.10.2016ன் படி 01.11.2016 அன்று நேரில் ஆஜராகி நகராட்சி வரி விதிப்பு மற்றும் வரி வசூல் தொடர்பான ஆவணங்களை நகராட்சி ஆணையர் இம்முறை மன்ற பரிசீலனைக்கு உட்படுத்த தவறியதையும், 10.03.2016 நாளிட்ட அறிக்கையில் வரி விதிப்பு மற்றும் வரி வசூல் முழுமைபடுத்தப்பட்டதை உறுதி செய்யாததையும் கருத்தில் கொண்டு எவ்வித முறைகேடுகளுமின்றி வரிவிதிப்பு விடுபாடின்றி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலம் அறிக்கையினை இரண்டு மாதங்களுக்குள் நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் இம்முறை மன்ற நடுவத்திற்கும் தாக்கல் செய்திட வேண்டுமென சிவகங்கை நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

//உண்மை நகல்//

செயலாளருக்காக

பெறுநர்

1. திரு. ஆர். பாலசுப்பிரமணியன்,
   வருவாய் உதவியாளர் (ஓய்வு)
   ஸ்ரீவீரபத்திரர் இல்லம்,
   555, பெருமாள்பட்டி கிராமம்,
   சோழபுரம் அஞ்சல், சிவகங்கை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   சிவகங்கை நகராட்சி,
   சிவகங்கை மாவட்டம்.

நகல்

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   மதுரை.

2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.